[25th March 1965

(3) Construction of pier with stacking platform; and

(4) Construction of a cargo shed.

SRI M. S. SELVARAJAN: Sir, May I know whether the Government think of the possibility of carrying out the preliminary works during the last year of the Third Plan itself?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR: I have no information.

Seizure of Forest Produce.

* 330 *Q.*—SRI M. V. KARIVENGADAM: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) the value of forest produce seized by the mobile forest patrol parties in the year 1963–64; and

(*b*) the number of cases detected and the amount of fine collected so far?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: (அ) ரூ. 22,284.41.

(இ) துப்பு துலக்கிய வழக்குகளின் எண்ணிக்கை: 1447. வசூலான இசைவுக் கட்டணத் தொகை (Compounding fees) ரூ. 85,964.68.

திரு. எஸ். ஜே. ராமசாமி: அபராதத் தொகை வசூலிக்கப் பட்டது பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். எந்த மரத்தைத் திருடியதற்காக அபராதத் தொகை வசூலிக்கப்பட்டது? சந்தன மரத்திலே எவ்வளவு? தேக்கு மரத்திலே எவ்வளவு?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: சந்தன மரத்தின் மூலமாகப் பிடிபட்டது ரூ. 9,000. மற்றவை சிறிய சிறிய கட்டுகளாகத் திருடிச் சென்றவை கைப்பற்றப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டது.

Selection for Forest Guard Training during 1963–64 *and* 1964–65.

* 331 *Q.*—SRI M. V. KARIVENGADAM: Will the Hon. the Minister for Co-operation be pleased to state the number of persons selected during the years 1963–64 and 1964–65 for Forest Guard Training?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: 1963-64, 1964-65-ம் ஆண்டுகள் ஒவ்வொன்றிலும் காடு காவற் காரப் (Forest Guard) பதவிக்குப் பயிற்சி பெறுவதற்கு அறுபது பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: ஃபாரஸ்ட் கார்டுகளைத் தேர்ந்தெடுக்க அவர்களுக்கு என்று பயிற்சிப் பள்ளி தனியாக இருக்கிறதா? அல்லது அனுபவத்தை வைத்துப் பயிற்சி கொடுக்கப்படுகிறதா?